# 2016 – 2017

2016 ஆகஸ்டு 04 ஆம் தேதி 2016-1017ஆம் கல்வியாண்டின் தமிழ்மன்றத் தொடக்கவிழா நடைபெற்றது. விழாவில் திரைப்பட இயக்குநர் மற்றும் பேச்சாளர் திரு. பாரதிகிருஷ்ணகுமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். விழாவினை முன்னிட்டு மாணவர்களின் பண்பாடுசார் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. எஸ்.என்.ஆர். கலையரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் ஆயிரத்திற்கும மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

2016 ஆகஸ்டு 10 ஆம் தேதி இந்திய நாட்டின் 69வது சுதந்திரதினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய கலை இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன.

2016 ஆகஸ்டு 31 ஆம் தேதி கோமுத்தூர் பூ.சா.கோ. அர. கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி முத்தமிழ் விழாவில் நடைபெற்ற வினாடிவினா போட்டியில் இரா.சன்மதி (முதலமாண்டு, இளம் அறிவியல் கணிதம்.) இரண்டாம் பரிசினையும் தனிநபர் நடிப்பு போட்டியில் பி.அருண் (மூன்றாமாண்டு, வணிகவியல் மற்றும் கனிணிபயன்பாட்டியல்) மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

2016 ஆகஸ்டு 31 ஆம் தேதி கோயமுத்தூர் இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் இரா.மதன் (இரண்டாமாண்டு, மின்னணுவியல்) இரண்டாம் பரிசினை வென்றார்.

2016 டிசம்பர் 27 ஆம் தேதி தமிழ் மன்றத்தின் சார்பாக எஸ்.என்.ஆர், கலையரங்கத்தில் ”சிகரங்களை நோக்கி 2016” கல்லூரி மாணவர்களுக்கான தன்னம்பிக்கைப் பயிலரங்கம் நடைபெற்றது. விழாவில் சிந்தனைப் பேச்சாளர் லட்சியத் தென்றல் அரிமா டி. லட்சுமிகாந்தன், யு.ஐ.டி. பேராசிரியர் ஆனந்த பார்த்திபன், பேச்சாளர் பி.கே. ஆனந்தி ஆகியோர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பயிற்சியளித்தனர். விழாவின் நிறைவில் சிறப்பு விருந்தனர் கரங்களால் பல்வேறு கலைஇலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டின் பொங்கல் திருநாளை முன்னிட்டு கல்லூரியின் மாணவர் மன்றமும் தமிழ் மன்றமும் இணைந்து ஜனவரி 09 – நமது கல்லூரியின் வளாகத்தில் உள்ள விருத்தாஸ்ரம் முதியோர் இல்லத்தில் உள்ள முதியவர்களோடு நமது கல்லூரியின் முதல்வர் முனைவர் கு. கருணாகரன் மற்றும் கல்விப்புல இயக்குநர் முனைவர் ஏ. எபினேசர் ஜெயக்குமார் அவர்களின் தலைமையில் மாணவர்கள் பொங்கலிட்டும் கலைநிகழ்ச்சிகள் நடத்தியும் கொண்டாடினர்.

தொடர்ந்து 11.01.2017 அன்று நமது எஸ்.என்.ஆர். கலையரங்கத்தில் கவிதாயினி உமாமகேஸ்வரி அவர்கள் தலைமையில் **“இன்றைய இளைஞர்களின் பாதை தன்னம்பிக்கை தருகிறதா? தட்டுத்தடுமாறுகிறதா?”** என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் கல்லூரியின் பல்துறை மாணவர்கள் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

13.01.2017 அன்று கல்லூரியின் அனைத்து துறைமாணவர்களும் இணைந்து பொங்கல்விழாவினைக் கொண்டாடினர். பொங்கல் விழாவினை முன்னிட்டு கோலப் போட்டி, உரியடித்தல், கயிறு இழுத்தல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

2017 பிப்ரவரி 21 உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு தமிழ் இலக்கிய சமுதாய அமைப்புகளின் கூட்டமைப்பு நடத்திய பேரணியில் நம் கல்லூரியின் தமிழ் மன்ற மாணவர்கள் 100 பேர் கலந்துகொண்டு தமிழ்மொழிக்கு பெருமைசேர்த்தனர்.

2017 மார்ச்சு 22 அன்று ராஜ் தொலைக்காட்சி நடத்திய அகட விகடம் நிகழ்ச்சியில் பங்கேற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.










தமிழ் மன்றம்
எஸ்.என்.ஆர். சன்ஸ் கல்லூரி
கோயமுத்தூர் - 641006
SNR